ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ நெய்க்குடத்தை ॥

*This document*[*] *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*] This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நெய்க்குடத்தை ॥

## அரவணையாதியான் காப்பாற்பிணி போக்கல்

‡நெய்க் குடத்தைப் பற்றி⋆ ஏறும்
எறும்புகள் போல் நிரந்து⋆ எங்கும்
கைக் கொண்டு நிற்கின்ற நோய்காள்!⋆
காலம் பெற உய்யப் போமின்⋆
மெய்க் கொண்டு வந்து புகுந்து⋆
வேதப் பிரானார் கிடந்தார்⋆
பைக் கொண்ட பாம்பணையோடும்⋆
பண்டன்று பட்டினம் காப்பே (1)

சித்திரகுத்தன் எழுத்தால்⋆ தென்புலக் கோன் பொறி ஒற்றி⋆
வைத்த இலச்சினை மாற்றித்⋆ தூதுவர் ஓடி ஒளித்தார்⋆
முத்துத் திரைக் கடற் சேர்ப்பன்⋆ மூதறிவாளர் முதல்வன்⋆
பத்தர்க்கமுதன் அடியேன்⋆ பண்டன்று பட்டினம் காப்பே (2)

வயிற்றில் தொழுவைப் பிரித்து⋆
வன்புலச் சேவை அதக்கி⋆
கயிற்றும் அக்காணி கழித்துக்⋆
காலிடைப் பாசம் கழற்றி⋆
எயிற்றிடை மண் கொண்ட எந்தை⋆
இராப்பகல் ஓதுவித்து⋆ என்னைப்
பயிற்றிப் பணிசெய்யக் கொண்டான்⋆
பண்டன்று பட்டினம் காப்பே (3)

மங்கிய வல்வினை நோய்காள்!⋆ உமக்கும் ஓர் வல்வினை கண்டீர்⋆
இங்குப் புகேன்மின் புகேன்மின்⋆ எளிதன்று கண்டீர் புகேன்மின்⋆
சிங்கப் பிரான் அவன் எம்மான்⋆ சேரும் திருக்கோயில் கண்டீர்⋆
பங்கப்படாதுய்யப் போமின்⋆ பண்டன்று பட்டினம் காப்பே (4)

மாணிக் குறள் உருவாய⋆ மாயனை என் மனத்துள்ளே⋆
பேணிக் கொணர்ந்து புகுத வைத்துக் கொண்டேன்⋆ பிறிதின்றி⋆
மாணிக்கப் பண்டாரம் கண்டீர்⋆ வலி வன் குறும்பர்கள் உள்ளீர்!⋆
பாணிக்க வேண்டா நடமின்⋆ பண்டன்று பட்டினம் காப்பே (5)

உற்ற உறுபிணி நோய்காள்!⋆ உமக்கொன்று சொல்லுகேன் கேண்மின்⋆
பெற்றங்கள் மேய்க்கும் பிரானார்⋆ பேணும் திருக்கோயில் கண்டீர்⋆
அற்றம் உரைக்கின்றேன்⋆ இன்னம் ஆழ்வினைகாள்!⋆ உமக்கிங்கோர்
பற்றில்லை கண்டீர் நடமின்⋆ பண்டன்று பட்டினம் காப்பே (6)

கொங்கைச் சிறுவரை என்னும்⋆ பொதும்பினில் வீழ்ந்து வழுக்கி⋆
அங்கோர் முழையினில் புக்கிட்டு⋆ அழுந்திக் கிடந்துழல்வேனை⋆
வங்கக் கடல் வண்ணன் அம்மான்⋆ வல்வினை ஆயின மாற்றி⋆
பங்கப் படாவண்ணம் செய்தான்⋆ பண்டன்று பட்டினம் காப்பே (7)

ஏதங்கள் ஆயின எல்லாம்⋆ இறங்க விடுவித்து⋆ என்னுள்ளே
பீதக வாடைப் பிரானார்⋆ பிரம குருவாகி வந்து⋆
போதில் கமல வன் நெஞ்சம்⋆ புகுந்தும் என் சென்னித் திடரில்⋆
பாத இலச்சினை வைத்தார்⋆ பண்டன்று பட்டினம் காப்பே (8)

‡உறகல் உறகல் உறகல்⋆ ஒண்சுடர் ஆழியே! சங்கே!⋆
அற எறி நாந்தக வாளே!⋆ அழகிய சார்ங்கமே! தண்டே!⋆
இறவு படாமல் இருந்த⋆ எண்மர் உலோக பாலீர்காள்!⋆
பறவை அரையா! உறகல்⋆ பள்ளியறைக் குறிக்கொண்மின் (9)

‡அரவத்தமளியினோடும்⋆ அழகிய பாற்கடலோடும்⋆
அரவிந்தப் பாவையும் தானும்⋆ அகம்படி வந்து புகுந்து⋆
பரவைத் திரை பல மோதப்⋆ பள்ளி கொள்கின்ற பிரானை⋆
பரவுகின்றான் விட்டுசித்தன்⋆ பட்டினம் காவற் பொருட்டே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥